

திராவிட மாடல் நல்லாட்சியில் மயிலை கிழக்குப் பகுதி 171.வது வட்டத்தில் கே.வி.பி. கார்டனில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலைத.வேலு தலைமையில் பகுதி கழக செயலாளர் எஸ். முரளி முன்னிலையில் தொகுதி மேம்பாட்டு நிதியில்இருந்து ரூபாய் 34:லட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி கட்டிடத்தை திறந்து வைத்தர். உடன் 171 வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதிகீதா முரளி, வட்டக் கழக செயலாளர் துரை பார்த்திபன், 124 அ.வட்டக் கழக பொறுப்பாளர் மா.பா.அன்பு, பி.எல்.தாஸ் கே.கணேஷ் பாண்டியன் மயிலை ரமேஷ், ஏ.அசோக் குமார், ஆர். சிவன், அன்னபூரணி, மோகன், சுசீலா, கலைச்செல்வி, கிரிஜா பிரவீன்பாபு ஸ்டார் குமார் ஆர்.எஸ்.மனோகர் மற்றும் 171 வது வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# சென்னை உள்ளிட்ட மாவட்டங்களில் மழை!

சென்னை,செப்.04–

தமிழகத்தில் அடுத்த 3 மணி நேரத்துக்கு சென்னை, திருவள்ளூர் உள்பட 15 மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வானிலை ஆய்வு மையம் தனது சமூகவலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருப்பத்தூர், ராணிப்பேட்டை, வேலூர், சேலம், நாமக்கல், தேனி, திண்டுக்கல், கரூர், திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




கத்தாரில் வசிக்கும் தமிழர்களின் பல்வேறு கோரிக்கைகளான தொழிலாளர் மற்றும் மீனவர்கள் நலன் சார்ந்த கோரிக்கைகள், வேலைவாய்ப்பு ஒப்பந்தம் தமிழ் மொழியில் கிடைக்க ஆவணம் செய்வது, குழந்தைகளுக்கு பள்ளிகளில் இடம் கிடைப்பது போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கத்தார் நாட்டு இந்திய தூதர் எச்.இ. விபுள் அவர்களை வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி கத்தார் நாட்டு தமிழ் நிர்வாகிகளுடன் சந்தித்து அவர்களது கோரிக்கைகளை விரைந்து முடிக்க வலியுறுத்தினார்.

# உதயநிதி ஸ்டாலினுக்கு துணை முதல்வர் பதவி!

## எர்ணாவூர் நாராயணன் வாழ்த்து!

சென்னை, அக். 4-

சமத்துவ மக்கள் கழக நிறுவனத் தலைவர் எர்ணாவூர் நாராயணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



திரைப்பட நடிப்பில் ஆர்வமாக நடித்து வந்த உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2018 மார்ச் முதல் தீவிர அரசியலில் ஈடுபட உள்ளதாக அறிவித்து 2019இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் தமிழகச் சட்டசபையின் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்களிலும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அதன் கூட்டணிக் கட்சிகளுக்குமான தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்டார். 2019 ல் திமுக இளைஞர் அணிச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேப்பாக்கம்திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் 2021 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார் தமிழக முழுவதும் தீவிர சுற்றுப் பயணத்தின் மூலம் இளைஞர்கள் எழுச்சியால் சட்டமன்றம் நாடாளுமன்றத்தில் திராவிட முன்னேற்ற கழகமும் அதன் கூட்டணி கட்சிகளும் மாபெரும் வெற்றி பெற்றதற்கு உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயணமே காரணமாக அமைந்தது.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழியில் தற்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு துணை முதல்வர் பதவி அறிவித்தமைக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. அவர் மேலும் பல பதவிகள் பெற்று தமிழகத்தின் வளர்ச்சிக்கு சிறப்பாக பணியாற்ற சமத்துவ மக்கள் கழகம் சார்பாக வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# நாமக்கல் மாவட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கும் நிகழ்ச்சி!

## கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் எம்.பி. இடத்தைப் பார்வையிட்டார்!

நாமக்கல், அக். 4 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாமக்கல் மாவட்டத்திற்கு வருகை தர உள்ளதை யொட்டி இடம் தேர்வு செய்யும் பணிகளை நாமக்கல் மாவட்டம், பொம்மை குட்டை மேடு, லட்சுமி திரு மண மண்டபம் அருகில் நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் ஆகியோர் தலைமையில், நாமக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ். ராஜேஸ் கண்ணன் முன்னிலையில், நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. தெரிவித்ததாவது, தமிழ்நாடு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகின்றார். அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மாவட்டங்களுக்கு நேரடியாக சென்று முடிவுற்ற புதிய திட்டப் பணிகளை தொடங்கி வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி மற்றும் பல்வேறு துறை சார்ந்த அரசு நலத் திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி வருகிறார்.

அதன் தொடர்ச்சியாக நாமக்கல் மாவட்டத்திற்கு பல்வேறு புதிய திட்டப் பணிகளை காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்து சிறப்பித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அக்டோபர் 2024 இல் நேரடியாக வருகை தந்து பல்வேறு திட்டப் பணிகளை தொடங்கி வைத்து, அடிக்கல் நாட்டி, அரசு நலத் திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்க உள்ளார்.

அதன்படி கூட்டுறவுத் துறை, மகளிர் திட்டம், வருவாய்த்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, வேளாண்மை துறை, வேளாண் பொறியியல் துறை, ஆதி திராவிடர் நலன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, தாட்கோ போன்ற பல்வேறு துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகளும், பொதுப்பணித்துறை, நகராட்சி நிர்வாகம், உள்ளாட்சித் துறை, ஊரக வளர்ச்சி துறை போன்ற துறைகளின் சார்பில் முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்து புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்ட உள்ளார். எனவே நலத் திட்ட உதவிகளை வழங்க, வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வரவேற்க தயாராகுங்கள் என தெரிவித்தார்.

இந்த ஆய்வில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சு.வடிவேல், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) கு.செல்வராசு, நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் ஆர்.பார்தீபன், பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் சிவக்குமார், நாமக்கல் வட்டாட்சியர் சினிவாசன், நாமக்கல் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




சென்னை தண்டையார்பேட்டை பெருநகர சென்னை மாநகராட்சி,மண்டல 4 அலுவலகத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன் எம்.சி, தலைமையில் அனைத்து அரசு துறை அதிகாரிகளுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.கூட்டத்தில் சிறப்பு ஆலோசர்கள் மண்டல 4ன் கண்காணிப்பாளர் ஆனந்தன் ஐ.ஏ.எஸ், வடக்கு வட்டாரத்து துணை ஆணையர் கட்டக் ரவி தேஜா ஐ.ஏ.எஸ், மண்டல அலுவலர் சரவணமூர்த்தி, சென்னை குடிநீர் வாரிய கண்காணிப்பு எ.ராதாகிருஷ்ணன், செயற் பொறியாளர்கள் திருநாவுக்கரசு, ஹரிநாத், மற்றும் திமுக,காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்ட் கட்சிகள் மாமன்ற உறுப்பினர்கள்,அரசு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## துரை கண்ணன் – விஜயலட்சுமி துரை கண்ணன் தலைமை!

# ஆர்.மதிவாணன் - எஸ்.பூஜா திருமண வரவேற்பு விழா!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு வாழ்த்துகிறார்!

சென்னை, அக். 4 -

சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் பகுதி, வழக்கறிஞர் ஆர். மதிவாணன் எஸ்.பூஜா ஆகியோரின் திருமண வரவேற்பு விழா இன்று (4.10.2024 வெள்ளிக்கிழமை) மாலை 7 மணிக்கு பெரம்பூர், திரு.வி.க.நகர், எஸ்.ஆர்.பி.கோயில் தெரு, பெருந்தலைவர் காமராஜர் சமுதாய கூடத்தில் நடைபெறுகிறது.



வழக்கறிஞர் துரை.கண்ணன், வழக்கறிஞர் விஜயலட்சுமி துரைகண்ணன் ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

பகுதிக் கழகச் செயலாளர்கள் எ.நாகராசன் எம்.சி, ஐ.சி.எப்.வ.முரளிதரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மணவிழா வரவேற்பில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

இவ்விழாவில் மேயர் பிரியா ராஜன், கலாநிதி வீராசாமி எம்.பி, இரா.கிரிராஜன் எம்.பி, ப.ரங்கநாதன், சி.மகேஷ்குமார், கே.சந்துரு, சரிதா மகேஷ்குமார் எம்.சி, தேவஜவகர், டி.லோகேஷ், எஸ்.பன்னீர்செல்வம், எஸ்.தனசேகர், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக்குமார், நா.முத்துவேல், இரா.தயாளன், எம்.சாக்ரடீஸ், வி.வெங்கடேசன், ஆர்.காஞ்சனா, பி.சூரி, பி.பழனி, இள.இளங்கோவன், எஸ்.கே.ரமேஷ், எல்.டி.தாமஸ், எஸ்.முருகன், என்.பவுல்ராஜ், என்.சௌந்தர், என்.ராமச்சந்திரன், எம்.டி.தமிழ்செல்வன், பா.அன்பரசு, டி.சந்திரசேகர், ந.பொன்முடி, பி.டி.சி.ரவி, கே.பி.ஆதவன்மணி, மாமன்ற உறுப்பினர்கள் கே.சாரதா, எம்.தாவூத்பீ, சி.ஸ்ரீதணி, டி.யோகபிரியா, டி.அமுதா மற்றும் பல கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

வட்டக் கழகச் செயலாளர்கள் ப.அதிபதி, எம்.ஜெ.சி.பாபு, பி.ஊமைதுரை, கே.ஜார்ஜ்குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

வழக்கறிஞர் எம்.செல்வபிரபு, ம.சரண்ராஜ், என்.பதா (எ) ஜெயராஜ் ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.

## பட்டாசுக் கடை வைக்க

# அக். 19க்குள் விண்ணப்பிக்கலாம்!

சென்னை,செப்.04-

தமிழகத்தில் தீபாவளியை முன்னிட்டு பட்டாசுக் கடை வைக்க விரும்புவோர்கள் அக்டோபர் 19ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்

தமிழ்நாட்டில் தீபாவளியை முன்னிட்டு பட்டாசுக் கடை வைக்க விரும்புவோர்கள் அக்டோபர் 19ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

தற்காலிக பட்டாசுக் கடை வைக்க https://www.tnesevai.tn.gov.in வாயிலாக விண்ணப்பிக்க வேண்டும் என தமிழக அரசு குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழகத்தில் வரும் 31ஆம் தேதி கொண்டாடப்பட உள்ள தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு, வெடிபொருள் சட்டம் 1884 மற்றும் வெடிபொருள் விதிகள் 2008 ன் கீழ், அனைத்து பகுதிகளில் தற்காலிக பட்டாசுக் கடைகள் வைக்க விரும்புவோர், விதி எண் 84 ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி இணையதளம் வழியாக தெரிவிக்கப்படுகிறது.

அக். 19ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு அனைத்து மாவட்டத்திலுள்ள இசேவை மையங்களில் https://www.tnesevai.tn.gov.in இணையதளம் வாயிலாக விண்ணப்பங்களை உரிய ஆவணங்களுடன் பதிவேற்றம் செய்யலாம்.

செப். 19க்கு பிறகு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டதெனில், அல்லது தற்காலிக உரிம ஆணையையும், நிராகரிக்கப்பட்டதெனில், அதற்கான உரிமத்தை இணையதளம் வாயிலாகவே மனுதாரர்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.


மேலும் அனுமதியின்றி / உரிமம் பெறாமல் பட்டாசு விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட நபர்கள் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இந்தியன் கனரக வாகன ஓட்டுநர்கள் நல கூட்டமைப்பு மற்றும் சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (ஒன்றிய அரசு நிறுவனம்) இணைந்து பாரத தூய்மை சேவை இயக்கமாக செயல்பட்டு வருகிறது. இதன் நிகழ்வாக இந்தியன் கனரக வாகன ஓட்டுநர்கள் நல கூட்டமைப்பு சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் உதவியுடன் சென்னை மணலி மாத்தூர் MMDA காலனியில் உள்ள தெருக்களில் 200 மரக்கன்றுகள் நடப்பட்டு வேலி அமைத்து தரப்பட்டது. அந்த பகுதி சங்க நிர்வாகிகள் முன்னிலை வகித்தார்கள். மரக்கன்று நடுதலை சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தின் மேலாளர் சீனிவாசன் மரச்செடிகள் நட்டு தொடங்கி வைத்தார்கள். மரக்கன்று நடும் விழாவை இந்திய கனரக வாகன ஓட்டுநர்கள் நலக் கூட்டமைப்பின் திட்ட இயக்குனர் வி.எஸ்.அனுஷா ஏற்பாடுகள் செய்தார். பொதுமக்கள் சார்பாக அப்பகுதியின் குடியிருப்பு சங்க நிர்வாகிகள் நடப்பட்ட மரக்கன்றுகளை பராமரிப்பதாக உறுதியளித்தார்கள்.




சென்னை வடக்கு மாவட்டம்
ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி தி.மு.க நடத்தும்
பொது உறுப்பினர்கள் கூட்டம்
04.10.2024 வெள்ளிகிழமை மாலை 6.00 மணி
இடம்: கேப்டன் மஹால் சென்னை-81



தலைமை
இரா.லட்சுமணன்
ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி செயலாளர்
முன்னிலை
ஆர்.வெற்றிவீரன் என்.அனிபா கே.பாலு
M.வேதலட்சுமி K.B.சதீஷ்குமார்
வரவேற்புரை
மா.நாகராஜன் N.M.கதிரேசன் தா.வ.மு.கஜேந்திரன் நா.கோதண்டன்
பா.குமார் ச.தமிழ்ச்செல்வன் பொ.து.ராஜா வீ.வடிவேல்
சிறப்புரை
ஆர்.எஸ்.பாரதி EX.MP
கழக அமைப்பு செயலாளர்
ஆர்.டி.சேகர் B.Com.,BL.MLA
பொறுப்பாளர் - சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க
Dr. கலாநிதி வீராசாமி MP
வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் / அயலக அணித்தலைவர்
ஜே.ஜே.எபினேசர் M.Com.,BL.,MLA
ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் - மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்
நந்தனம் S.நம்பிராஜன் இரா.மதிவாணன் S.ஜெபதாஸ்பாண்டியன்
ஆர்.கே.நகர் தொகுதி பொறுப்பாளர் EX.MLA ஆர்.கே.நகர் மேற்கு பகுதி செயலாளர்
என்.மருதுகணேஷ் T.V.முத்துகிருஷ்ணன் த.தமிழ்கொடி கு.நற்குணம் வண்ணை மோகன்
வெ.சு.சத்தியநாராயணன் C.மணிகண்டன் இர.பொன்இளவரசன் A.ரமேஷ்பாபு P.சதீஷ்குமார்
M.M.சாமி P.K.மூர்த்தி J.சுரேஷ்பாபு P.அன்பழகன் R.ரமேஷ் V.முத்து K.மோகன் T.R.தணிகாசலம் M.ரூபசங்கர் சா.திருப்பதிசாமி
குமாரி நாகராஜ் MC தேவி கதிரேசன் MC பவித்ரா நரேஷ்குமார் MC
நன்றியுரை ஆர்.டி.ராஜா பகுதி துணைச்செயலாளர்
நிகழ்ச்சி ஏற்பாடு இரா.லட்சுமணன்
பகுதி கழக செயலாளர்
ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி தி.மு.க